simcoe muskoka DISTRICT HEALTH UNIT

www.smdhu.org/GetBoosted



கோவிட்-19 வைரஸ் இன்னும் நம் சமூகத்தில் பரவி வருகிறது, இதனால் ஒவ்வொருவரும் தங்களையும் மற்றவர்களையும் வைரஸால் பாதிக்கப்படுவதிலிருந்தும், கடுமையாக நோய்வாய்ப்படுவதிலிருந்தும் பாதுகாப்பது முக்கியமானதாகும்.

பூஸ்டர் தடுப்பூசிகள் உட்பட, பரிந்துரைக்கப்பட்ட அனைத்து கோவிட்-19 தடுப்பூசி தவணைகளையும் போட்டுக்கொள்வது உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் மற்றும் நண்பர்களையும் பாதுகாக்கும்.

கோவிட்-19 தடுப்பூசிகளிலிருந்து கிடைக்கும் பாதுகாப்பும், கோவிட்-19 வந்த பிறகு நமக்குக் கிடைக்கும் நோய் எதிர்ப்புச் சக்தியும் காலப்போக்கில் குறைகிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நாம் மேலும் இதைப்பற்றி அறிந்து கொள்ளும்போது தடுப்பூசி பரிந்துரைகள் மாறும்.

உள்ளூர் தடுப்பூசி மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் சில மருத்துவர் அலுவலகங்களில் பூஸ்டர் தடுப்பூசிகள் கிடைக்கின்றன.

சுகாதார அட்டை இல்லாமலேயே தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியும். உங்களுடைய முகவரி மற்றும் அடையாளச் சான்று தேவை.

தடுப்பூசி போட்டுக்கொள்ள இலவச போக்குவரத்து உள்ளது

மருத்துவமனைகளில் மொழிபெயர்ப்பு உதவி கிடைக்கும், இருப்பினும் நீங்கள் விரும்பினால் மொழிபெயர்ப்பிற்கு உதவ ஒரு ஆதரவாளரை நீங்கள் அழைத்து வரலாம்.

தடுப்பூசிகள் பற்றிய நம்பகமான தகவல்களை ஹெல்த் கனடா (Health Canada) அல்லது ஒன்டாரியோ அரசாங்கம் போன்ற ஆதாரங்களில் இருந்து பெறுங்கள்.

பூஸ்டர் தடுப்பூசி பாதுகாப்பானது, மற்ற கோவிட்-19 தடுப்பூசி தவணைகளில் நீங்கள் என்ன எதிர்பார்ப்பீர்களோ, அதைவிட பக்கவிளைவுகள் எதுவும் அதிகரிக்காது.